OS 38/2021

வா.சா.1 தரணி க/பெ ராஜேந்திரன்

நாள் 29.01.2025

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

3. நான் அருணகிரி சத்திரத்தில் வசித்து வருகிறேன். நான் சத்துணவு சூப்பர்வைசர் ஆக விழுப்புரத்தில் வேலை செய்து வருகிறேன். விழுப்புரத்தில் என் மகன் வீடு உள்ளது அங்கு தங்கியுள்ளேன். என் மாத வருமானம் ரூ.30,000/- ஆகும். நான் என் அலுவலகத்தில் கடன் வாங்கியுள்ளேன். என் சம்பளத்தில் பிடித்தம் போக கைக்கு வரும் தொகை ரூ.15,000/- ஆகும். என் சம்பள சீட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. பிரதிவாதி மீது இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு என் உயர் அதிகாரிகளிடம் அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை. 23.11.2019 அன்று பிரதிவாதி என்னிடம் பணம் கேட்டார். ரூ.3,00,000/- கேட்டார். பணம் கேட்கும் போது பிரதிவாதி மட்டும் தான் வந்தார். நான் கையில் வைத்திருந்த ரொக்கப் பணத்தை தான் பிரதிவாதிக்கு கொடுத்தேன். ரூ.500/- நோட்டுக்களாக பிரதிவாதிக்கு கொடுத்தேன்.

5. தாவா கடனுறுதி சீட்டு அச்சு படிவம் ஆகும். கடனுறுதி சீட்டை ஜெயபால் எழுதினார். கடனுறுதி சீட்டில் பிரதிவாதி இரண்டு கையெழுத்துகள் செய்தார். பிரதிவாதி தரப்பில் சாட்சி கையெழுத்து போட யாரும் வரவில்லை. என் தரப்பில் பரசுராமன் மற்றும் முரளி ஆகியோர் சாட்சி கையெழுத்து போட்டார்கள். சாட்சிகள் இருவரும் எனக்கு தெரிந்தவர்கள் ஆவார்கள்.

6. வா.சா.1 கடனுறுதி சீட்டில் வில்லையின் மீது உள்ள பிரதிவாதியின் கையெழுத்து வித்தியாசமாக உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி தான் 2 கையெழுத்துகளையும் போட்டார். கடனுறுதி சீட்டை நானே தயார் செய்து நானே கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

7. நான் வட்டி தொழில் செய்யவில்லை. நான் சீட்டு எதுவும் நடத்தவில்லை. பிரதிவாதி தனது வீட்டு செலவிற்காக தான் என்னிடம் கடன் கேட்டார். 2 பைசா வட்டி பேசப்பட்டது. பிரதிவாதி வட்டி முறையாக செலுத்தினாரா என்றால் நான் பணம் கேட்க சென்ற போது பிரதிவாதி வீட்டில் இருப்பதில்லை. பிரதிவாதி செலுத்த வேண்டிய வட்டி தொகை தோராயமாக ரூ.40,000/- இருக்கும். ரூ.40,000/- 2 வருடத்திற்கான வட்டியாகும். இதுகுறித்து பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

8. நான் நடத்தி வரும் சீட்டில் பிரதிவாதியும் உறுப்பினர் என்ற முறையில் தான் பிரதிவாதி எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. நான் சீட்டு நடத்தவில்லை. கருணா, முரளி, பீட்டர் ஆகியோர் யார் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி சீட்டு கட்டி வந்ததன் அடிப்படையில் பிரதிவாதியிடம் இருந்து வெற்று கடனுறுதி சீட்டில் கையெழுத்து பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சீட்டு எதுவும் நடத்தவில்லை.

9. தாவா கடனுறுதி சீட்டு போர்ஜெரியான ஆவணம் என்றும் அதில் பிரதிவாதியின் கையெழுத்தை நானே செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் சீட்டு நடத்தி வந்தது சம்பந்தமாக பிரதிவாதி வீட்டிற்கு சென்று தரக்குறைவாக பேசி தகராறு செய்தேன் என்பது குறித்து பிரதிவாதி என் மீது திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்து அந்த புகார் துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு விசாரணை

செய்யும் போது என் தரப்பில் இரும்பேடு வெங்கடேசன் என்பவர் ஆஜரானார் என்றால் இல்லை.

10. பிரதிவாதி என்னிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்றும் பிரதிவாதி என் மீது புகார் கொடுத்தார் என்பதற்கான பழி வாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் தாவா கடனுறுதி சீட்டை போர்ஜெரியான முறையில் நானே தயார் செய்து பிரதிவாதியின் கையெழுத்தையும் செய்து இந்த தவறான வழக்கை பிரதிவாதி மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.